# தேவன் ஜெபத்தைக் கேட்டு சிங்கங்களின் வாயை அடைத்தார்

**ஜெபம்:** "அன்பான பிதாவே, இந்தப் பாடத்தை உபயோகித்து பிள்ளைகள் விசுவாசத்தோடு ஜெபிக்க போதிப்பீராக."

குழந்தைகளின் வயதுக்கும் தற்போதைய தேவைகளுக்கும் ஏற்ற நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளவும்.



**தானியேலும் சிங்கங்களும்:** தானியேல் 6 ஆம் அதிகாரத்தில் இருந்து கதையை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ மனப்பாடமாகக் கூறட்டும் அல்லது வாசிக்கட்டும். இது எவ்வாறு தேவன் தானியேலின் ஜெபத்தைக் கேட்டு, சிங்கங்கள் அவனை கொன்று தின்னாதபடி தப்புவித்தார் என்று கூறுகிறது.

**கேட்கவும்:** (பதில் ஒவ்வொரு கேள்விகளுக்குப் பின்னரும்).

1. இராஜாவின் அதிகாரிகள் தானியேலின் மேல் ஏன் பொறாமை கொண்டனர்? (3)
2. ஜெபத்தைப் பற்றி ஒரு புதிய சட்டத்தை உண்டாக்க வேண்டும் என்று இராஜாவின் அதிகாரிகள் ஏன் விரும்பினர்? (5)
3. இராஜாவின் புதிய சட்டத்தைக் கேள்விப்பட்ட தானியேல் என்ன செய்தான்? (10)
4. சிங்கக் கெபியில் கிடந்த அன்று இரவு தானியேல் என்ன செய்தான்? (18)
5. சிங்கங்களிடம் இருந்து தாவீது எப்படி தப்புவிக்கப்பட்டான்? (22).
6. தானியேல் சிங்கங்களிடம் இருந்து தப்புவிக்கப்பட்ட பின்பு இராஜா கொண்டு வந்த புதிய சட்டம் என்ன? (26)

கதையின் பகுதிகளை **நாடகமாக்குக** (தானி. 6).

மந்தையின் தலைவர்களோடு பேசி, ஆராதனை வேளையில் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும். சிறுவர்களை நன்கு பயிற்றுவிக்கவும்.

**பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள்** நடிக்க வேண்டிய பாத்திரங்கள்.

**கதை கூறுபவர்:** கதைச்சுருக்கம் கூறுக. பிள்ளைகள் பேச/நடிக்க வேண்டியதை ஞாபகப்படுத்துக.

**இராஜா:** ஒரு காகிதத்தை வைத்துக் கொள்ளவும். "இராஜாவின் ஆணை."

**தானியேல்**

**சிறுவர்கள் நடிக்க வேண்டியது:**

**இராஜாவின் அதிகாரிகள்,** காகிதம் ஒன்றை வைத்துக் கொள்ளவும் (இராஜாவின் ஆணை)

**சிங்கங்கள்:** கையும், முழங்காலும் ஊன்றி நடந்து சிங்கம் போல் உறுமவும்.

**தேவ தூதன்:** ஒரு துணியை வைத்துக் கொள்ளவும்.

**வீரர்கள்**

**கதை கூறுபவர்:** வசனங்கள் 1-10 ல் உள்ள கதையின் முதல் பகுதியைக் கூறி, பின், "இராஜாவின் அதிகாரிகள் என்ன கூறுகிறார்கள் என்பதைக் கேளுங்கள்."

**இராஜாவின் அதிகாரிகள்:** சத்தமாகக் கூறுவது.

"நம்மை விட தானியேலுக்கு இராஜா முக்கியம் அளிக்கிறார்!"

"அவனை நாம் அகற்ற வேண்டும். அவன் மீது என்ன குற்றம் சுமத்தலாம்?"

"அவன் தவறே செய்வது இல்லை."

"தானியேலின் கடவுளை நோக்கி ஜெபிக்கக் கூடாது என்பதாக இராஜாவின் ஆணையைப் பெற வேண்டும்."

**இராஜா** : அதிகாரிகளிடம் காகிதத்தைக் கொடுக்கிறான். "நல்லது. இதோ நீங்கள் விரும்பும் புதிய சட்டம். எல்லோரும் என்னை நோக்கியே ஜெபம் செய்ய வேண்டும்!"

**தானியேல்:** ஒரு நாற்காலி மீது ஏறி, ஒரு ஜன்னலைத் திறப்பது போல் நடிக்கவும். பின் முழங்கால் ஊன்றி, "தேவனே! நான் உம்மை மட்டுமே வணங்குவேன்! உம்மை எந்நாளும் துதிப்பேன்!"

**கதை கூறுபவர்:** வசனங்கள் 11-18 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். "இராஜாவின் அதிகாரிகள் என்ன கூறுகிறார்கள் என்பதைக் கேளுங்கள்."

**இராஜாவின் அதிகாரிகள்:** "இராஜாவே! தானியேல் இன்னும் அவனது கடவுளையே வணங்குகிறான்." "அவனை நீர் சிங்கக் கெபியிலே போட வேண்டும்."

**இராஜா** : "ஓ! இல்லை! நான் இதைச் செய்ய விரும்பவில்லை! ஆனால்.. இது சட்டம். அவனை கெபியிலே போட்டு, வாசலை ஒரு கல்லால் அடைத்துப் போடுங்கள். ஓ! எனக்கு வருத்தமாக இருக்கிறது! நான் இரவு முழுவதும் தூங்கவும் சாப்பிடவும் மாட்டேன்!"

**வீரர்கள்** : தானியேலை சிங்கங்களின் நடுவில் எறிகிறார்கள்.

**சிங்கங்கள்:** கர்ஜிக்கின்றன.

**கதை கூறுபவர்:** வசனங்கள் 19-22 ல் இருந்து கதையின் மூன்றாம் பகுதியைக் கூறவும். "தூதன் கூறுவதைக் கேளுங்கள்."

**தேவதூதன்:** துணியால் சிங்கத்தின் வாயைக் கட்டி "சிங்கங்களே! தானியேலுக்கு துன்பம் செய்ய வேண்டாம்."

**சிங்கங்கள்:** தானியேலைச் சுற்றி நடந்து, படுத்து, உறங்கி விடுகின்றன.

**இராஜா** : "விடிந்து விட்டது" (சிங்கங்கள் இருக்கும் இடத்துக்கு சென்று) "தானியேலே! உயிரோடு இருக்கிறாயா? உன் தேவன் உன்னை இரட்சித்தாரா?"

**தானியேல்:** "ஆமாம்! ஒரு தேவதூதன் சிங்கங்களின் வாயைக் கட்டிப் போட்டார்."

**கதை கூறுபவர்:** வசனம் 23-28 லிருந்து கதையின் நான்காவது பகுதியைக் கூறவும். "இராஜா கூறுவதைக் கேளுங்கள்."

**இராஜா** : "மகிழ்ச்சி! அந்தத் தீய அதிகாரிகளைக் கொண்டு போய் சிங்கங்களுக்குப் போடுங்கள். இப்போது, நாம் தானியேலின் தேவனை வணங்குவோம்."

**வீரர்கள்** : அதிகாரிகளை சிங்கங்களுக்குப் போடுகின்றனர்.

**சிங்கங்கள்:** உறுமிக் கொண்டு அதிகாரிகளைத் தாக்குகின்றன.

**கதை கூறுபவர்:** விசுவாசத்தோடு ஜெபிக்க கற்றுக் கொடுத்த யாவருக்கும் நன்றி கூறுகின்றனர்.

**கேள்விகள்:** சிறுவர்கள் நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்ட கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும் (தானியேலும் அவனது ஜெபமும் பற்றி).

**சிறுவர்களைக் கேளுங்கள்:** நாம் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டியது பற்றிய பிற உதாரணங்கள் என்ன? (சிறுவர்கள் உதாரணங்கள் தருக).

ஒரு சிங்கத்தின் படத்தை வரையவும் அல்லது காட்டவும்.

சிறுவர்கள் அதைப் பார்த்து வரையட்டும். அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களிடம் படத்தைக் காட்டி, ஜெபத்தில் விசுவாசம் உள்ளவர்களாய் இருப்பது எவ்வாறு என்று இது காட்டுகிறது என்று (இதற்காக மக்கள் நம்மை வெறுத்தாலும்) விளக்கம் அளிக்கவும்.



**மனனம் செய்க:** 2 தெச. 3:2.

**சங்கீதம்:** சங். 57:4, 5, 6 ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

**ஜெபம்:** "கர்த்தாவே, நீர் வல்லமையுள்ளவர். உம்மால் சிங்கத்தின் வாயைக் கட்ட முடியும். நாங்கள் எப்போதும் உம்மை நம்புவோம். நாங்கள் எப்போதும் உம்மை நோக்கி ஜெபிப்போம். கடினமாக இது இருக்கும் போதும் கெட்ட காரியங்கள் நடந்தாலும், நீர் எங்களை நித்திய மரணத்தில் இருந்து விடுவிப்பீர். இயேசுவின் நாமத்தினால் ஆமென்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net